## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.8/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பரிமளா | மதம் | : இந்து |
| க/பெ | : சுந்தரமூர்த்தி | ஜாதி | : -- |
| வயது | : 60 | கிராமம் | : பாகசாலை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**25.08.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு குடும்ப அட்டை, ஆதார் அட்டை ஆகியவை உள்ளதா என்றால் உள்ளது. அதன் அசலோ, நகலோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் 1, 2, 3, 4 பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு என்றால் என் சித்தப்பா பிள்ளைகள் ஆவார்கள். 2ம் பிரதிவாதி சங்கர் உயிருடன் உள்ளரா என்றால் இறந்துவிட்டார். வழக்கின் சொத்து விவரம் பற்றி எனக்கு ஏதாவது தெரியுமா என்றால் தெரியும். வழக்கில் A அட்டவணை, B அட்டவணை என எதற்காக காட்டியுள்ளேன் என்றால் ஒன்று வாங்கிய சொத்து, ஒன்று பூர்வீக சொத்தாகும். என் அப்பா பெயர் என்ன என்றால் சுப்பிரமணி ஆகும். நடேச பிள்ளை யார் என்றால் என் தாத்தா ஆவார். அவரது மனைவி பெயர் என்ன என்றால் கன்னியம்மாள் ஆகும்.

2. என் அப்பா பெயரைதான் எனது ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றில் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். நடேச பிள்ளைக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 1. எனது அப்பா சுப்பிரமணிய பிள்ளை, 2.தாந்தோணி பிள்ளை, 3. ரங்கபிள்ளை, 4. கிருஷ்ட பிள்ளை, 5. பலராம் பிள்ளை, 6.ராஜகோபால் ஆவார்கள். அவருக்கு பெண் பிள்ளை மல்லிகா உள்ளாரா என்றால் ஆமாம். நடேச பிள்ளை உயிருடன் இருக்கும்போது பூர்வீக சொத்துக்களை தனது பிள்ளைகளுக்கு ஏதேனும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. நடேச பிள்ளை சுயமாக

சம்பாதித்த சொத்தில் தனது பிள்ளைகளுக்கு ஏதேனும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. நடேச பிள்ளை கன்னியமாளுக்கு தானமாக ஏதேனும் எழுதி வைத்தாரா என்றால் 1 ஏக்கர் சொத்து எழுதி வைத்துள்ளார். அது என்ன ஆவணம் என்றால் எனக்கு தெரியாது.

3. நடேச பிள்ளை கன்னியமாளுக்கு தானமாக எழுதி வைத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்தெந்த புல எண்ணில் உள்ளவைகளை எழுதி வைத்துள்ளார் என்றால் 22, 7, 27, 33, 2/43 ஆகும். கன்னியம்மாள் பெயருக்கு ஏதேனும் பட்டா வந்ததா என்றால் எனக்கு தெரியாது. நடேச பிள்ளையின் வாரிசுகளுக்கு பிள்ளைகள் உள்ளார்களா என்றால் தாந்தோணி பிள்ளை தவிர மற்ற அனைவருக்கும் பிள்ளைகள் உள்ளார்கள். தாந்தோணி பிள்ளை பத்மா (எ) பத்மாவதியை திருமணம் செய்தார் என்றாலும் அவர்களுக்கு குழந்தைகள் இல்லை என்றாலும் சரிதான். புல எண்.11/7, 11/8A ஆகியவை முரளி என்பவருக்கு விற்பனை செய்ததாக எனது பிராதில் சொல்லியுள்ளதில் எந்த காரணத்திற்காக விற்பனை செய்தேன் என்றால் தகராறு செய்ததால் விற்பனை செய்தேன்.

4. புல எண்.11/7, 11/8A ஐ குறிப்பிட்டு எனது பிராதில் சேர்க்கவில்லை என்றால் நான் சேர்த்துள்ளேன். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் படிப்பறிவு இல்லாததால் என்னால் சொல்ல முடியாது. எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் 2001ல் இறந்தார். எனது பிள்ளைகள் பெயர் சொல்ல முடியுமா என்றால் 1.குகன், 2. சரளா, 3. சகிலா, 4. மணிகண்டன் ஆவார்கள். V. முரளிக்கு நான் எழுதி கொடுத்த ஆவணத்தில் எனது இரண்டு மகன்களும் சாட்சி கையெழுத்திட்டுள்ளனர் என்றால் ஆமாம். தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் என் பாட்டி எனக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார். தான செட்டில்மெண்ட் ஆவணம் எந்த வருடம் பதிவு செய்யப்பட்டது என்றால் 2004 ஆகும். என்னை திருமணம் செய்து கொடுத்து ஊர் எது என்றால் பாகசாலை ஆகும். வழக்கு சொத்து உள்ள ஊர் எது என்றால் பொன்னன்குளம். வழக்கு சொத்து உள்ள ஊர் நான் குடியிருக்கும் ஊரில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் 2 கி.மீட்டர் இருக்கும்.

5. என் பாட்டி கன்னியம்மாள் எனக்கு தான பத்திரம் எழுதி கொடுக்கும்போது பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் என் தாத்தா பெயரில் இருந்தது. தாத்தா பெயரில்

உள்ள பட்டா விவரத்தை தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். என் பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். அந்த் தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் பரிமாள அவர்களின் தகப்பனார் தாந்தோணி பிள்ளை என்று குறிப்பிட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். என் தகப்பனார்தான் தாந்தோணி பிள்ளை என்பதற்கு என்ன ஆதாரம் கொடுத்து பத்திரம் பதிவு செய்தோம் என்றால் ஊரறிய தத்தெடுத்து கொண்டார். சாதிப்படி தத்தெடுத்து கொண்டார். பத்திரம் பதியும்போது என்ன ஆவணம் கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

6. என் தகப்பனார்தான் தாந்தோணி பிள்ளை, சுப்பிரமணிய பிள்ளை என்பதற்கு என்ன ஆதாரம் கொடுத்து பத்திரம் பதிவு செய்தோம் என்றால் ஆவணம் கொடுத்திருக்கலாம். எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தில் எந்த இடத்திலாவது என்னை தத்தெடுத்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தில் சொத்து கன்னியம்மாளுக்கு எப்படி பாத்தியம் என்பது காண்பிக்கப்படாமல் வா.சா.ஆ 1 ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு சொல்ல தெரியவில்லை. இறந்து போன நடேச பிள்ளையின் வாரிசு சான்றிதழ் பெற்று வா.சா.ஆ 1 ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றால் வைத்திருப்பார்கள். எனக்கு தெரியவில்லை. நடேச பிள்ளையின் வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)